**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண்.122/2018** **நாள்.06.06.2022**

2022ம் ஆண்டு ஜுன் திங்கள் 06ம் நாள் வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்திரசேகரன் | தொழில் | |
| த.பெ./க.பெ. | கந்தசாமி | சாதி | |
| கிராமம் | மேல்மலையனூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 59 |

**வ.சா.2**

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் வாதி, பிரதிவாதிகளை எனக்கு தெரியும். வாதிகள் இருவரும் சகோதரர்கள். சொத்து சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். பட்டணகவுண்டர் என்பவரை நான் பார்த்ததில்லை. பட்டணகவுண்டரின் மகன்கள், சடையகவுண்டர், ரங்கசாமி கவுண்டர், கன்னிகவுண்டர் ஆகியோரை தெரியும். கன்னிகவுண்டர் என்பவர் மட்டும் ஸ்லோனில் இருந்தார். மேற்படி கன்னிகவுண்டர் விஷேச நாட்களில் ஸ்லோனில் இருந்து தாவா கிராமத்திற்கு வந்து செல்வார் என்றால் சரிதான். வயதான பிறகு மேல்மலையனூரில் வந்து நிரந்தரமாக தங்கிவிட்டார். பட்டணகவுண்டர் இறந்து 50 ஆண்டுகள் கழித்து தான் அவருடைய குமாரர்கள் தாவா சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் பாகம் பரித்துக்கொண்டார்கள். பாகம் பிரிப்பதற்கு 1992ம் ஆண்டு எழுதப்பட்ட கூர் சீட்டில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். மேற்படி கூர் சீட்டை மேல்மலையனூரை சேர்ந்தவர் எழுதினார். மேற்படி கூர் சீட்டு கையால் எழுதப்பட்டது. கூர் சீட்டில் என்னுடன் எத்தனை பேர் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. கூர் சீட்டில் வாதி, பிரதிவாதிகள் கையெழுத்து போட்டார்களா என்று எனக்கு தெரியாது. கூர் சீட்டில் எந்தளந்த சர்வே நெம்பரில் உள்ள சொத்துக்கள் யார்யாருக்கு பாகமாக வைக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. கூர் எழுதியது மட்டும் எனக்கு தெரியும். கூர் சீட்டில் கன்னிகவுண்டருக்கு ஒரு ஏக்கர் 5 செண்ட் பாகமாகவும், 80 செண்ட் சடையகவுண்டருக்கும், 58 செண்ட் ரங்கசாமிக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது. கூர் சீட்டு எழுதப்படுவதற்கு முன்பே அவர்அவர்களுக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவர்அவர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும் கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும்

வாதி ராமசந்திரன் மற்றும் 1ம் பிரதிவாதி சொக்கலிங்கம் ஆகியோர் எழுதிக்கொண்ட கிரைய ஒப்பந்தத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். ஆனால் அந்த ஆவணம் பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி கிரைய ஆவணத்தில் உள்ள சாட்சியின் 1 வது சாட்சி கையெழுத்து மட்டும் பி.த.சா.ஆ.1 ஆகும். நான் கூர் சீட்டில் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றாலும், மேற்படி 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி எழுதிக்கொண்ட கிரைய ஒப்பந்தத்தில் தான் சாட்சி கையொப்பம் போட்டேன் என்றாலும் சரியல்ல. சடையக்கவுண்டர் பாக அட்டவணை பத்திரத்தை சொக்கலிங்கத்திற்கு எழுதிக்கொடுத்தார். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். பிறகு 1ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியமான சொத்துக்களை 1 வாதியின் மகன் பட்டுசாமிக்கு போகிய பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி சொக்கலிங்கம் தான் அனுபவதித்து வருகிறார் என்றாலும், அதன் பட்டாவும் அவர் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். போக்கிய ரசீது எழுதவதற்கு முன்பு, எழுதிய பின்பும் 1ம் பிரதிவாதி தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார். வாதிகளும், 1ம் பிரதிவாதியும் மாறி மாறி சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார்கள். அவர்அவர்களுக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவர்அவர்கள் அனுபவம் செய்து வருவதை 1ம் பிரதிவாதி தடை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருவது மற்றவர்களும் தடை செய்யவில்லை. 1ம் வாதிக்கு பாகமாக வந்த சொத்துக்களை 1ம் பிரதிவாதியின் தம்பிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். வாதிகள் அவர்களுக்கு பாகமாக வந்த சொத்துக்களை விற்பனை செய்துவிட்டு 1ம் பிரதிவாதிக்கு பாகமாக வந்த சொத்துக்களை அடையவேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 1,2 ம் பிரதிவாதிகளுக்கு பாகமாக வந்த சொத்துக்களை அபகரிப்பதற்காக தாக்கல் செய்த வழக்கில் நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.